**செய்தி வெளியீடு எண் : 651** **நாள் : 05.04.2023**

**<u>செய்தி வெளியீடு</u>**

# "அனைவருக்கும் IITM" திட்டத்தில் மின்னணு சார்ந்த செய்முறைப் பயிற்சிகள் அளித்திடும் வகையில் 250 அரசுப் பள்ளிகளுக்கு மின்னணு செய்முறைப் பெட்டகங்களை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று (5.4.2023) சென்னை ஐஐடி வளாகத்தில், **"அனைவருக்கும் IITM"** திட்டத்தில் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மின்னணு சார்ந்த செய்முறைப் பயிற்சிகள் அளித்திடும் வகையில் 250 அரசுப் பள்ளிகளுக்கு மின்னணு செய்முறைப் பெட்டகங்களை வழங்கினார். மேலும், **"தமிழ்நாடு முதலமைச்சரின் திறனறி தேர்வு"** என்ற புதிய திட்டத்தினை அறிவித்தார்.

அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் கல்வி நலன் கருதி பள்ளிகளின் வகுப்பறைக் கட்டடங்கள், குடிநீர் வசதி உள்ளிட்ட அடிப்படைக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், இணைய வசதிகளைப் பள்ளிகளில் ஏற்படுத்துதல், 1 முதல் 5ஆம் வகுப்பு வரை பயிலும் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம், மாணவர்களின் கற்றல் திறனை அதிகரித்து, தமிழ்நாட்டு மாணவர்களின் கல்வித் தரத்தினை உயர்த்திட "இல்லம் தேடிக் கல்வி", "நம் பள்ளி நம் பெருமை", 'நான் முதல்வன்' என்கிற பள்ளி, கல்லூரி மாணவ, மாணவியர்களுக்கான திறன் மேம்பாட்டுத் திட்டம், அரசுப் பள்ளிகளில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1000/- உதவித் தொகை வழங்கும் "புதுமைப் பெண்" திட்டம் என பல்வேறு கல்வி மேம்பாட்டிற்கான திட்டங்களை இந்த அரசு செயல்படுத்தி வருகிறது.

## <u>"அனைவருக்கும் IITM" திட்டம்</u>

அனைவருக்கும் IITM திட்டமானது, மாண்புமிகு பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களால் 5.1.2023 அன்று சென்னை ஐஐடி வளாகத்தில் தொடங்கி வைக்கப்பட்டு அன்று முதல் 8.2.2023 வரை ஆறு கட்டங்களாக 250 பள்ளிகளைச் சேர்ந்த 500 ஆசிரியர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது.

நம் நாட்டின் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களில் முதன்மை நிறுவனமான சென்னை ஐஐடியை கிராமப்புற மாணவர்கள் உட்பட அனைத்து மாணவர்களுக்கும் கொண்டு சேர்க்கும் முயற்சியாக அந்நிறுவனம் உருவாக்கி செயல்படுத்தி வரும் திட்டம் **"அனைவருக்கும் IITM"** ஆகும்.

இத்திட்டத்தின் ஒரு பகுதியாக, ஐஐடி, சென்னையால் வழங்கப்படும் நான்காண்டுப் படிப்பான B.S. Data Science and Applications (தரவுப் பயன்பாட்டு அறிவியல்) பட்டப்படிப்பில் கடந்த கல்வியாண்டில் சேர தமிழ்நாட்டிலுள்ள 20–க்கும் மேற்பட்ட மாவட்டங்களிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 87 மாணவர்களில் 45 மாணவர்கள் அரசுப் பள்ளி மாணவர்கள் ஆவர் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், இத்திட்டத்தின் ஒரு பகுதியாக அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த சுமார் 250 மாணவர்களுக்கு கடந்த ஆண்டு ஒரு வார காலம் சென்னை ஐ.ஐ.டியில் அடிப்படைக் கணிதம் மற்றும் அறிவியல் குறித்த உண்டு உறைவிடப் பயிற்சியும் அளிக்கப்பட்டது.

சென்னை ஐஐடி வாயிலாக 250 அரசுப் பள்ளிகளைச் சேர்ந்த 500 அறிவியல் ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு அவர்கள் வாயிலாக 1 இலட்சம் மாணவர்கள் பயன்தரும் வகையில் தயாரிக்கப்பட்ட மின்னணு செய்முறை பெட்டகங்களை அப்பள்ளிகளுக்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் இன்று வழங்கினார்.

**<u>புரிந்துணர்வு ஒப்பந்தம்</u>**

அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மின்னணுவியல் செய்முறை குறித்த பயிற்சி அளிக்கவுள்ள பயிற்சி முடித்த அரசுப் பள்ளி ஆசிரியர்களுக்கு இப்பயிற்சியின் போது ஆசிரியர்களுக்கு தேவையான உதவிகளை வழங்கிடும் வகையில் சென்னை–ஐஐடி–க்கும் பள்ளிக்கல்வித் துறைக்கும் இடையே மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் முன்னிலையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இதன்மூலம், 250 அரசுப் பள்ளிகளின் 1 இலட்சம் மாணவர்கள் மின்னணு சார்ந்த செய்முறைப் பயிற்சி பெற்று பயன்பெறுவார்கள்.

**"தமிழ்நாடு முதலமைச்சரின் திறனறித் தேர்வு" திட்டம்**

இத்திட்டங்களின் தொடர்ச்சியாக, **"தமிழ்நாடு முதலமைச்சரின் திறனறித் தேர்வு"** என்ற புதிய திட்டத்தையும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்.

இப்புதிய திட்டத்தின் வாயிலாக பத்தாம் வகுப்புப் பயிலும் 1000 மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்கள் அனைவருக்கும் பதினொன்றாம், பன்னிரெண்டாம் வகுப்புகளை நிறைவு செய்யும் வரை ஒவ்வொரு மாதமும் ரூபாய் 1000/- கல்வி உதவித் தொகை வழங்கப்படும். மேலும், இம்மாணவர்களுக்கு ஐஐடி போன்ற தமிழ்நாட்டிலுள்ள முன்னணி கல்வி நிறுவனங்களில் தொடர்பயிற்சிகளும் வழங்கப்படும்.

இது மட்டுமல்லாமல், இத்திட்டத்தில் தெரிவு செய்யப்படும் மாணவர்கள் அவர்களுடைய உயர்கல்வியைத் தொடரும்பொழுதும் ஒவ்வோர் ஆண்டும் ரூ.12,000/- வீதம் கல்வி உதவித் தொகை வழங்கப்படும்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின், மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. மா. சுப்பிரமணியன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சென்னை, ஐஐடியின் இயக்குநர் முனைவர் வீ.காமகோடி பள்ளிக் கல்வித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி. காகர்லா உஷா, இ.ஆ.ப., பள்ளிக் கல்வித்துறை ஆணையர் திரு. க. நந்தகுமார், இ.ஆ.ப., மற்றும் ஐஐடி பேராசிரியர்கள், பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

****

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in